**வானவில் கலையகம்**

உங்கள் இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகள் எதுவானாலும் சிறந்த முறையில் அதி உயர் தொழில்நுட்பத்தில் வீடியோ படம் பிடித்திடவும் போட்டோ அல்பம் தயாரித்திடவும்

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகள் Internetமுலம் உங்கள் இல்ல நிகழ்வுகள் , ஆலய நிகழ்வுகள் எதுவானாலும் அதி உயர் தரத்தில் நேரடியாக (LIVE TLECAST) முலம் பார்த்து மகிழ்ந்திடவும்

தொடர்பு கொள்ளுங்கள்

**வானவில் கலையகம்**

இல 330, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்தி)

யாழ்ப்பாணம்

0212229466 , 0772487550

www.vanavilstudio.com



10/=

பக்கங்கள் 06

# எதிரொலி

Ethiroli

குரல் 01 | அதிர்வு 73 | செவ்வாய்க்கிழமை ஜூலை 25 2017 | ethirolimedia@gmail.com | 021 300 48 48




## லலித் ஜயசிங்கவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

புங்குடுதீவு மாணவி வித்யா கொலை சம்பவத்தின் பிரதான சந்தேக நபர்களில் ஒருவரான சுவிஸ்குமாரை தப்பிக்க வைக்க உதவியதாகக் கூறப்படும் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. வித்தியா படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை யாழ். ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் இன்று எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கு விசாரணையின் போது முன்னிலைப்படுத்தப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்கவை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு

06



## இன்று சரணடைந்த சந்தேகநபர் வாக்குமூலம்

# சவாலுக்காக சுட்டேன்!

“துணிவிருந்தால் துப்பாக்கியுடன் நிற்கும் பொலிஸ்காரரைச் சுடமுடியுமா? என்று எனது மைத்துனர் சவால் விட்டார். அதனால்தான் நான் பொலிஸின் துப்பாக்கியைப் பறித்து அவரை நோக்கி சுடுவது போல பாசாங்கு செய்தேன். ஆனால், எதிர்பாராத விதமாக துப்பாக்கி வெடித்து விட்டது” இவ்வாறு வாக்குமூலம் அளித்துள்ளார் நல்லூர் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி.

சம்பவம் நடந்தபின்னர் அங்கிருந்து தப்பித்தோடிய குறித்த சந்தேகநபர் இன்று காலை 8.20 மணியளவில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். பின்னர் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

செல்வராசா ஜயந்தன் (வயது - 39) என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் சட்டத்தரணியுமான பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர இது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை

06

## சாதாரண பிரஜைகளின் நிலை என்ன ?

நாட்டின் நீதித்துறைக் கட்டமைப்பின் பாதுகாவலர்களான நீதிபதிகளையோ அவரது பாதுகாப்புத் தரப்பினரையோ இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் நாட்டின் சாதாரண பிரஜைகளினது பாதுகாப்பு குறித்து பல்வேறு சந்தேகங்களை தோற்றுவிப்பதாக கிழக்கு முதலமைச்சர் தெரிவித்துள்ளார். யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவம் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இதனைக் கூறினார், யாழ் மேல்நீதிமன்ற நீதிபதி மா இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் உத்தியோகத்தரின் மரணம் தொடர்பில் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் இந்தச் சம்பவம் தொடர்பில் தனது கடுமையான கண்டணத்தையும் தெரிவிக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

### முன்னாள் போராளிக்கு

## ஆயுள் தண்டனை

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு பலவந்தமாக ஆள் சேர்ப்பில் ஈடுபட்டார் என்ற குற்றத்திற்காக, தமிழீழ இசைக் கல்லூரியின் பொறுப்பாளர் கண்ணதாசனுக்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஆயுள் தண்டனை வழங்கி, வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கண்ணதாசன், கொழும்பு அரசினால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர். இவர் மீது, கிளிநொச்சியைச் சேர்ந்த பெண் ஒருவர், தனது பிள்ளையைப் பலவந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் பிடித்துச் சென்று இணைத்தார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து வழக்குத் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு மீதான விசாரணை வவுனியா மேல் நீதிமன்

06

## வடக்கு - கிழக்கு பாதுகாப்பு விசேட கூட்டத்தில் ஆராய்வு



யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் மீதான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தையடுத்து எற்பட்டுள்ள நிலைமைகள் மற்றும் வடக்கு கிழக்கின் இயல்பு நிலைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை ஆராயும் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது. பாதுகாப்புப் படை முக்கியஸ்தர்கள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் ஆகியோருக்கு இடையில் குறித்த விசேட சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போது வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்

06

## முதலமைச்சர் நேரில் அஞ்சலி



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் உயிரிழந்த பொலிஸ் அதிகாரிக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் அஞ்சலி செலுத்தியுள்ளார். சிலாபத்திலுள்ள அவரது இல்லத்துக்கு இன்று விஜயம் மேற்கொண்ட முதலமைச்சர், பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தியதோடு அவரது உறவினர்களுக்கு ஆறுதல் தெரிவித்துள்ளார். (எ)

## இடைத் தரகர்கள் யார்? காணொளி உண்மையா?

### ஆராயப் பணிப்பு!

இலங்கையில் தமிழ் சிங்கள மக்களுக்கிடையிலான தொடர்புகள் சுமூகமற்ற சூழலில், சுவிஸ் நாட்டில் வசித்துவந்த சாதாரண தமிழ்ப் பிரஜை ஒருவர் இங்குள்ள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த உயர் பொலிஸ் அதிகாரியுடன் எவ்வாறு நேரடியாகத் தொடர்பைப் பேண முடிந்தது என்பது தொடர்பில் சந்தேகம் வெளியிட்டுள்ளது ஊர்காவற்றுறை நீதிமன்று அத்துடன் சுவிஸ்குமாருக்கும் பொலிஸ் அதிகாரி லலித் ஜயசிங்கவிற்கும் இடையில் யாரேனும் இடைத் தரகர்களாகச் செயற்பட்டார்களா என்பது தொடர்பில் விசாரணை நடத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதேவேளை சுவிஸ்குமாரினைக் கட்டிவைத்து

06

### போராட்டம்

## முடிவு

அரசாங்க மருத்துவர்கள் மேற்கொண்டு வந்த பணி புறக்கணிப்பு போராட்டம் நிறைவுக்கு வந்துள்ளதாக அச்சங்கம் அறிவித்துள்ளது. சட்ட ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரும் பிரமரின் அலுவலக பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுடன் இன்று நண்பகல் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அடுத்தே போராட்டம்முடிவுக்கு வந்துள்ளது.

இன்று காலை முதல் அரச அதிகாரிகள் சங்கம் 24 மணி நேர போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தமை தெரிந்ததே.(உ)

# சதொசவுக்கு தொடர்பில்லை

சீனிக் கொள்கலனிருந்து கொக்கேன் கண்டெடுக் கப்பட்டமை தொடர்பில் சதொச நிறுவனத் துக்கோ அதன் ஊழியர்களுக்கோ எந்தத் தொடர் பும் கிடையாது என்று கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரிசாத் பதியூதீன் தெரி வித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கை யில்,

தமக்கும் சதொச நிறுவனத்துக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான பிரசாங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அமைச்சர் கூறினார்.

பொலிஸாரும் சுங்கப் பிரிவினரும் போதைப் பொருள் ஒழிப்பு பணியகமும் விசாரணைகளை நடத்துகின்றன. விசாரணையின் பின்னர் உண்மை யான தகவல்கள் அம்பலமாகும் என அவர் கூறி னார். (உ)

# கோத்தாவை தடுப்பதென்றால் மகிந்தவை பிரதமராக்குங்கள்








கோத்தபாய ராஜபக்சவை ஜனாதிபதியாக்கும் எண்ணம் ஆபத்தானது. அவரை ஜனாதிபதியாக்கும் மகிந்தராஜபக்சவின் கனவை சிதறடிக்க வேண்டும் என்றால் மகிந்தராஜபக்சவை பிரதமராக நியமிப்பதே சிறந்த வழி என பிரதி அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு கருத்துரைத்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"நாங்கள் 18 பேர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்த இந்த அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து செப்ரெம்பருக்குள் வெளியேறும் முடிவிலுள்ளோம். ஏனையவர்கள் அவ்வாறு செய்யாவிடினும் நான் ஒரு முடிவு எடுப்பேன். ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகிந்தவை பிரதமராக நியமித்தால் இந்தச் சிக்கல் இருக்காது என நினைக்கிறோம். மஹிந்தவை மைத்திரி பிரதமராக நியமித்தால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நாம் மைத்திரியை ஜனாதிபதியாக்குவோம். மகிந்த புதிய கட்சி ஒன்றின் ஊடாக ஆட்சியைப் பிடிப்பதற்கும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாவை களமிறக்குவதற்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பம் இது. அதைத் தடுப்பதென்றால் அவர் பிரதமராக நியமிக்கப்பட வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

# இந்திய ஜனாதிபதிக்கு பிரதமர் வாழ்த்து



இந்தியாவின் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ராம்நாத் கோவிந்த் இன்று ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்டுள்ளார். பதவியேற்பு நிகழ்வு நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் இன்று நண்பகல் 12.15 மணியளவில் நடைபெற்றது. ஜனாதிபதியாகப் பதவியேற்ற ராம்நாத் கோவிந்துக்கு இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் நீண்டகாலமாக இடம்பெற்று வரும் மதம் மற்றும் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட இரு தரப்பு உறவுகள் புதிய ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் மேலும் வலுவடையும் என்று தாம் நம்புவதாகவும் இரு நாடுகளும் அந்நியோன்னியமாகச் செயற்படுவதில் முன்னெடுத்துவரும் பணியில் புதிய ஜனாதிபதியுடன் நெருக்கமாகச் செயற்படுவதற்கு தாம் எதிர்பார்ப்பதாகவும் ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ)

# தப்பிச் சென்ற சந்தேகநபர் நடுக்கடலில் கைது



முல்லைத்தீவு - முகத்துவாரம், கொக்கிளாய் பகுதியில் இளைஞரொருவர் மீது கத்தி குத்துத் தாக்குதலை மேற்கொண்டதாக சொல்லப்படும் சந்தேகநபர் தப்பிச் செல்ல முற்பட்ட வேளை பொலிஸார் நடுக்கடலில் வைத்து கைது செய்துள்ளனர். நேற்று மாலை கொக்கிளாய் பகுதியில் கடற்றொழிலில் ஈடுபடுவர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ள நிலையில் இளைஞரொருவர் மீது மற்றொரு நபர் கத்தி வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இந்த நிலையில் தாக்குதலை மேற்கொண்ட நபர் கடல் வழியாக தப்பிச் செல்ல முயற்சித்த வேளை பொலிஸார் மற்றுமொரு படகில் சென்று சந்தேகநபரைக் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர். (உ)

# அர்ஜுன ரணதுங்க மானநஷ்ட வழக்கு



தனக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் செயற்பட்டார்கள் என்று துறைமுக அதிகாரசபையைச்சேர்ந்த பிரசன்ன மற்றும் லால் பன்கமுவுக்கு எதிராக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

மேலும், பிரசன்ன மற்றும் லால் பன்கமுவ துறைமுக அதிகார சபையின் தலைவராக தங்களை காட்டிக் கொண்டதோடு மட்டுமல்லாது மக்களை தவறாக வழிநடத்துகின்றமை மற்றும் தனது நற்பெயருக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் செயற்படுகின்றமை குறித்தே அமைச்சர் ஒவ்வொரு வரும் தலா 500 மில்லியன் ரூபா தர வேண்டும் என்று கோரி மான நஷ்ட வழக்குத்தாக்கல்செய்துள்ளார். (உ)

# மின்வெட்டு சீரானது

கெரவலப்பிட்டிய பகுதியிலுள்ள மின்னுற்பத்தி நிலையத்தில் ஏற்பட்டிருந்த தொழிநுட்ப பிரச்சினை தற்போது சீர் செய்யப்பட்டுள்ளதாக, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கெரவலப்பிட்டிய மின் நிலையத்தில் நேற்று ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறு காரணமாக நாடுமுழுவதும் பகுதி பகுதியாக சில மணிநேரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# மகிந்தவின் காலில் விழுந்தார் சீனப் பிரஜை

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கண்டி தலதா மாளிகைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டிருந்தார். நேற்றுமுன்தினம் மஹிந்த கண்டிக்கு சென்ற போது, எதிர்பாராத சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அங்கு தலதா மாளிகைக்கு அருகில் பலர் மஹிந்தவின் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டனர். திடீரென சீன நாட்டவர் ஒருவர் மஹிந்தவின் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் அங்கிருந்த அனைவரினதும் அவதானத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பல சீன நாட்டவர்கள் மஹிந்தவுடன் இணைந்து புகைப்படம் எடுத்துக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ)




மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848


# சென். மேரிஸை எதிர்கொள்ளும் இந்து இளைஞர்

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரில், 'ஏ' பிரிவினருக்கான காலிறுதியாட்டம் ஒன்றில் வெற்றிபெற்ற ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரில், 'ஏ' பிரிவு அணிகளுக்கான போட்டிகளில், நேற்று இரவு நடைபெறவிருந்த முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடவேண்டிய கிளிநொச்சி ஆதவன் விளையாட்டுக் கழகம் வராதமையால், அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதன்மூலம், காலிறுச் சுற்றுக்குத் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் முன்னேறியது.

பின்னர் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற சுற்றுக் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றது.

அரையிறுதியில் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மன்னார் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதும். (ஐ)



# மரணக் கிராமம்!

ரஷ்யாவின் வடக்கு ஒசட்டியாவின் ஒதுக்குப்புறமாக டர்காவ்ஸ் என்ற கிராமம் அமைந்துள்ளது.
இந்தக் கிராமம் 5 மலைகள் அமைந்துள்ள இடத்தில் உள்ளது, ஏராளமான குன்றுகள் உள்ளன.
இந்தக் கிராமம் மிக அழகாக இருந்தாலும், யாரும் இங்கு செல்ல விரும்புவதில்லை.ஏனெனில் இந்த கிராமத்துக்குச் செல்பவர்கள் யாரும் உயிரோடு திரும்ப மாட்டார்களாம்.
இறந்தவர்கள் மட்டும் வாழும் கிராமமாக இது கருதப்படுகிறது.
இந்தக் கிராமத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் இறந்த உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகள் பல மாடிகளைக் கொண்டுள்ளன.
இவற்றின் ஒவ்வொரு தளத்திலும் இறந்த உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன.
இங்கு மக்கள் செல்ல விரும்பாமைக்கு முக்கிய காரணம், இங்கு நிலவும் கடுமையான வானிலையாகும்.
இன்னொரு காரணமும் சொல்லப்படுகிறது, 19 ஆம் நூற்றாண்டில் இந்த கிராமத்தில் வாழ்ந்த மக்கள் கடுமையான நோய் தொற்றுக்கு ஆளாகியுள்ளார்.
அந்த நோயின் தீவிரம் குறையும் வரை இவர்கள் வேறு எங்கும் செல்லவில்லை.
இவர்கள் இறந்தபின்னர் கூட அவர்களது வீட்டிலேயே புதைக்கப்பட்டனர்.
அதன் பின்னரே இது இறந்தவர்களின் கிராமமாக மாறியது என்கிறார்கள்.(இ)

# ஆறு மாதங்களாக பாலியல் சித்திரவதை

## கதறும் சிறுமி



ஈராக்கைச் சேர்ந்த 16 வயது சிறுமி ஒருவர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு தொடர்ந்து ஆறு மாதம் பாலியல் வற்புறுத்தலுக்கு ஆளானதாக கண்ணீருடன் கூறியுள்ளார்.
ஈராக்கின் வடக்கு பகுதியைச் சேர்ந்தவர் எக்லஸ். இவருக்கு 14 வயது இருக்கும் போது, டேஷ் என்ற அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் அவர் இருக்கும் பகுதிக்கு வந்து பலரைக் கொலை செய்துவிட்டு, ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை கடத்திச் சென்றுள்ளனர். அதில் எக்லஸும் ஒருவர்.
அதன் பின் அவர்களிடமிருந்து தப்பிய எக்லஸ் , பிரபல ஆங்கில ஊடகம் ஒன்றுக்குப் பேட்டி அளிக்கையில்,
“ என்னைக் கடத்திச் சென்ற தீவிரவாதிகள் சில காலத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் என்னையும் இன்னும் சில சிறுமிகளையும் விற்றுவிட்டனர்.
அதில் 10 வயது மதிக்கத்தக்க சிறுமிகளும் அடங்குவர்.
அப்போது அங்கிருக்கும் தீவிரவாதி ஒருவன் என்னைக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்வான். அவன் தொடர்ந்து ஆறு மாதங்கள் என்னைப் பாலியல் சித்திரவதைக்கு உள்ளாக்கினான்” எனக் கூறியுள்ளார். (இ)

# ஆப்கானில் 24 பேர் பலி!

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நடந்த கார்க் குண்டு வெடிப்பு மற்றும் தற்கொலைப் படை தாக்குதலில் 24 பேர் பலியாகினர். 42 பேர் காயமடைந்தனர்.
இதுகுறித்து அதிகாரிகள் தரப்பில், “காபூலில் அரசுப் பணியாளர்களை ஏற்றி வந்த பேருந்து மீது வெடிகுண்டு நிரப்பிய கார் ஒன்று மோதியதில் 24 பேர் பலியாகினர். 42 பேர் காயமடைந்தனர்.
காயமடைந்தவர்கள் பலர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து அந்தப்பகுதியில் மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. இந்தத் தற்கொலைப்படைத் தாக்குதல் ஆப்கானிஸ்தானின் முக்கிய அரசியல்வாதியான முகமத் முகுக் இல்லத்தின் அருகே நிகழ்ந்துள்ளது” என்று கூறப்படுகின்றது.
இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (இ)

# கடுகுக்கு அனுமதி மறுப்பு

மரபணு மாற்றம் செய்யப்பட்ட கடுகுக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சர் ஹர்ஷ் வர்த்தனுக்கு தமிழக எதிர்க்கட்சித் தலைவரும், திமுக செயல் தலைவருமான ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.
இது தொடர்பாக அவர் எழுதிய கடிதத்தில், “மரபணு மாற்றம் செய்யப்பட்ட கடுகை வணிக ரீதியாகப் பயன்படுத்துவதற்கு சுற்றுச்சூழல், வனம், மற்றும் பருவநிலை மாற்றத் துறையின் கீழ் இயங்கும் மரபணு பொறியியல் அங்கீகாரக் குழு அனுமதி வழங்கியிருப்பது அதிர்ச்சியளிக்கிறது .இந்த முடிவு நாட்டில் உள்ள விவசாயிகளையும்,நுகர்வோரையும் மிகவும் மோசமாகப் பாதிக்கும் ஆபத்து மிகுந்ததாக அமைந்துள்ளது.
இதன் அடிப்படையில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட கடுகுக்கு அனுமதி வழங்கும் முடிவு எதையும் சுற்றுச்சூழல், வனம், மற்றும் பருவநிலை மாற்ற துறை எடுக்க முயற்சிப்பது நாட்டு நலனுக்கு எவ்விதத்திலும் உகந்தது அல்ல என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.” என்று தெரிவித்துள்ளார்(இ)

# சீனாவில் 31 மாடியில் சுரங்க ரயில் நிலையம்



சீனாவில் பூமிக்கு அடியில் 31 மாடியில் சுரங்க ரயில் நிலையம் ஒன்றை அமைக்கும் பணியில் அங்குள்ள மெட்ரோ ரயில் அமைப்பு தீவிரம் காட்டி வருகிறது.
சீனாவின் சாங்கிங் மாகாணத்தில் உள்ள மெட்ரோ சுரங்க ரயில் நிலையத்தில் இந்த 31 மாடிக் கட்டடம் அமைய உள்ளது. இது சுமார் 94 மீற்றர் ஆழம் வரை செல்லக் கூடியதாகும்.
சாலையில் இருந்து பூமிக்கு அடியில் ரயில் நிலையம் செல்ல நகரும் படிக்கட்டு (எக்ஸ்லேட்டர்) அமைக்கப்படுகிறது. அதன் மூலம் பூமிக்கு அடியில் உள்ள ரயில் தளத்துக்கு 3 நிமிடத்தில் செல்ல முடியும்.
இந்தத் திட்டத்தின் மூலம் உலகில் உள்ள மிக ஆழமான மெட்ரோ ரயில்களில் இதுவும் ஒன்று என்ற பெருமையைப் பெறவுள்ளது. (இ)

# எமது படையை யாரும் அசைக்க முடியாது!



பூட்டான் எல்லைப் பகுதியில் தன் படைகளைச் சீனா குவித்துள்ளதால், இந்தியா-சீனா இடையே போர்ப் பதற்றம் ஏற்பட்டு இருக்கிறது.பதிலுக்கு இந்தியாவும் தன் படைப்பலத்தை அங்கு அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் இந்தியாவை எச்சரிக்கும் வகையில் சீனா கருத்து வெளியிட்டுள்ளது.
“பாதுகாப்பு இறையாண்மையைச் சீர்குலைக்கும் வகையில் சீன எல்லையில் சட்டவிரோதமாகக் குவிக்கப்பட்டு இருக்கும் படைகள் அனைத்தையும் இந்தியா உடனடியாக வாபஸ் பெற வேண்டும்.
இது போன்ற தவறுகளை இந்தியா உடனடியாகத் திருத்திக்கொள்ள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறோம்.
இல்லாவிட்டால் சீனப் படைகள் அதற்குப் பதிலடி கொடுக்க தயங்காது.
இந்தியப் படைகளை வாபஸ் பெற்றால் மட்டுமே இந்தப் பிரச்சினை முடிவுக்கு வரும். எல்லையில் போர்ப் பதற்றத்தை தணிக்க இரு நாடுகள் இடையே கூட்டு முயற்சி அவசியம்.
சீனாவில் மக்கள் விடுதலை இராணுவம் உருவாக்கப்பட்டு 90 ஆண்டுகள் ஆகிறது.
தேசிய இறையாண்மை, பிராந்திய ஒருங்கிணைப்புக்காக உருவாக்கப்பட்ட இந்தப் படை அசைக்க முடியாத அமைப்பாக உள்ளது. மலையைக் கூட எளிதாக அசைத்து விடலாம். ஆனால், இந்தப் படையை அவ்வளவு எளிதாக யாரும் “அசைக்க முடியாது” என சீனா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கலாமுக்கு சலாம்: வைரமுத்து பாடல்




இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமுக்காக “கலாம் கலாம், சலாம் சலாம்... நாளை இந்தியா வல்லரசாக, நாளும் உழைத்தீர் ஐயா” என்ற பாடலை கவிஞர் வைரமுத்து உருவாக்கியுள்ளார்.
பாடலுக்கான குறுந்தகடு சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் நேற்று வெளியிடப்பட்டது. வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் பாடலை வெளியிட்டார்.
கவிஞர் வைரமுத்து மற்றும் இயக்குநர் வசந்த் சாய் ஆகியோர் குறுந்தகட்டைப் பெற்றுக்கொண்டனர். எம்.எஸ்.சுவாமிநாதன் வேளாண் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி பரசுராமன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
அப்துல்கலாமின் புகழ் மகுடத்தில் ஒரு வைரக்கல்லாக விளங்கும் வகையில் இந்தப் பாடலை கவிஞர் வைரமுத்து எழுதியுள்ளார். (இ)



# திக்கம் உதைபந்தாட்டம்: சிவானந்தா, நியூட்டன் அசத்தல்

திக்கம் மத்திய சனசமூக நிலைய வைர விழாவையொட்டி நடத்தப்படும் உதைபந்தாட்டத் தொடரின் முதல்நாள் ஆட்டங்களில் கொற்றாவத்தை சிவானந்தா, சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகங்கள் வெற்றிபெற்றன.

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு உதைபந்தாட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் ஆரம்ப நிகழ்வுகளுடன் முதல் நாள் போட்டிகள் நேற்று இரவு நடைபெற்றன.

முதலாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வரணி யூத் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் சிறப்பாக இரு அணிகளும் ஆடியபோதும், சிவானந்தா அணி போட்ட கோலுக்கு யூத்தால் பதில் கோல் போட முடியாமல் போனது. இதனால் ஆட்டத்தின் முடிவில் சிவானந்தா விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டிய சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம், 2:0 என்ற கோல் கணக்கில் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியது. (ஐ)



## ரஜினி அரசியலுக்கு வந்தால் “செந்தில்தான் முதல்வர்”

ரஜினி அரசியலுக்கு வந்தால் முதல் ஆளாக அவர் கட்சியில் நான்தான் இணைவேன் பிரபல நகைச்சுவை நடிகரான செந்தில் தெரிவித்துள்ளார்.

சினிமாவில் ஆர்வம் காட்டி வந்த நடிகர்கள் சில பேர் இப்போது அரசியலில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அந்த வகையில் ரஜினி அரசியலுக்கு வருவது குறித்தும், அவருடைய கட்சி குறித்தும் நிறையப் பேச்சுகள் வருகிறது.

இந்நிலையில் ஒரு பேட்டியில் ரஜினியின் அரசியல் பிரவேசம் குறித்துக் கருத்து வெளியிட்ட நகைச்சுவை நடிகர் செந்தில்,

“ரஜினி அரசியலுக்குக் கண்டிப்பாக வரவேணும். இந்த முறை கண்டிப்பாக வருவார் என்ற நம்பிக்கை இருக்கிறது. அவர் கட்சி ஆரம்பித்தால் முதல் ஆளாக நான் அவருடன் இணைவேன்” என்றார். (ஒ)

## மூடுவிழா

கடந்த 32 ஆண்டுகளாக பயன்பாட்டில் இருக்கும் எம்.எஸ். பெயிண்ட்டுக்கு மூடுவிழா நடத்த மைக்ரோசொப்ட் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

மேலும் அதற்குப் பதிலாக விண்டோஸ் 10 இயங்குதளத்தின் புதிய அப்டேட்டில் பெயிண்ட் 3டி இடம்பெறும் என்று கூறப்பட்டுள்ளது.

‘பெயிண்ட்’ படங்கள் வரைவதற்கும், புகைப்படங்களை எடிட் செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்ததுடன், சிறுவர்கள் வரைந்து பழக ஏதுவாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)




## புதியவர் நியமனம்

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பிக்கவுள்ள நிலையில், இலங்கை அணிக்கு புதிய துடுப்பாட்டப் பயிற்சியாளராக இலங்கை அணியின் முன்னாள் வீரரான ஹசான் திலகரட்ண நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்காலிகத் துடுப்பாட்டப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ள இவர், இந்திய அணிக்கு எதிரான தொடருக்கு மாத்திரமே பணியாற்றவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

ஹசானின் நியமனம் குறித்து இலங்கைக் கிரிக்கெட் சபையின் மேலாளர் கூறுகையில்,

“ஹசானின் அனுபவம் வீரர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். அதுமாத்திரமின்றி போட்டியின்போது எப்படி சமாளிப்பது மற்றும் டெஸ்ட் போட்டிகளில் நீண்ட நேரம் எப்படித் துடுப்பெடுத்தாடுவது என்பனவற்றை அவரிடமிருந்து அறிந்துகொள்ளலாம்” என்று கூறியுள்ளார்.

இலங்கை அணியின் முன்னாள் வீரரான ஹசான், 83 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். 2003-2004 ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கை அணியின் தலைவராகவும் இருந்துள்ளார்.

கடந்த வாரம்தான் இலங்கை அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளராக இலங்கை அணியின் முன்னாள் வீரரான சமிந்தவாஸ் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## “தமிழ் கற்க ஆசை”

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான பிரெட்லீ ‘தமிழ் நாடு பிரீமியர் லீக்’கில் பங்கேற்கும் அணிக்கு வேகப்பந்து வீச்சாளர்களுக்கு நேற்று பயிற்சி அளித்தார்.

முன்னதாக அவர் அந்தக் கல்லூரி மாணவ, மாணவிகளிடம் கலந்துரையாடினார். அப்போது பிரெட்லீயிடம் மாணவர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

**கேள்வி:- டோனி பற்றி சில வார்த்தைகள்...?**

பதில்:- டோனி என்றதும், அவருடைய ‘ஹெலிகொப்டர் ஷொட்’ தான் நினைவுக்கு வருகிறது. அவருடன் விளையாடியது எனக்குக் கிடைத்த அதிர்ஷ்டம்.

**கேள்வி:- நீங்கள் கிரிக்கெட் வீரராக வராமல் இருந்திருந்தால்...?**

பதில்:- பொலிவூட் ஸ்டாராகி இருப்பேன்.

**கேள்வி:- நீங்கள் பந்துவீசும்போது, உங்களுக்குச் சவாலாகத் திகழ்ந்த இந்திய வீரர் யார்?**

பதில்:- என்னை மிரட்டிய - சவாலாகத் திகழ்ந்தவர் சச்சின்



டெண்டுல்கர்தான். அவருக்குப் பந்து வீசுவது கடினம்.

**கேள்வி:- தமிழ்நாடு பற்றி...?**

பதில்:- அழகான மக்கள் வசிக்கும் அற்புதமான இடம். தொன்மையான வரலாறும், பாரம்பரியமும் கொண்ட மண். எனக்குத் தமிழ் கற்க ஆசை உண்டு. எனக்கு ஹிந்தி கொஞ்சம் தெரியும். இங்கு வெப்பம் அதிகமாக இருப்பதால் வியர்த்துக் கொட்டுகிறது. இருந்தாலும், இங்கு இருப்பதை நான் விரும்புகிறேன்.

**கேள்வி:- தமிழ்நாட்டில் உங்களுக்கு பிடித்த உணவு?**

பதில்:- இங்கு கிடைக்கும் அனைத்துமே பிடித்தமான உணவுகள்தான். குறிப்பாக ஜிகர்தண்டா என்றால் கொள்ளை பிரியம்.

இவ்வாறு அவர் கூறினார். (ஐ)




## மறக்க முடியாத காலி ஆடுகளம்

“காலி ஆடுகளம் எனக்கு மறக்கு முடியாத களம்” என இந்திய சுழற் பந்து வீச்சாளர் அஸ்வின் தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

முதலாவது ஆட்டம் நாளை காலியில் ஆரம்பிக்கும் நிலையில், அந்தப் போட்டி இந்திய வீரரான அஸ்வினுக்கு 50ஆவது போட்டியாகும். 50ஆவது டெஸ்ட் அனுபவம் குறித்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்,

“சர்வதேச கிரிக்கெட் போட்டியைப் பொறுத்தவரை ஒவ்வொரு நாளும் நாம் ஆட்டத்தில் முன்னேற்றம் காண வேண்டியது முக்கியமானதாகும். 50ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவது சிறப்பானதுதான். இன்னும் எத்தனை போட்டிகளில் விளையாடுவோம் என்பது நமக்குத் தெரியாது.

“காலி மைதானம் எனக்கு மறக்க முடியாததாகும். 2015ஆம் ஆண்டு தொடரின்போது இங்கு நடந்த டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்டுகளை வீழ்த்தியது என் மனதில் நிலைத்து நிற்கிறது” என்று தெரிவித்தார்.

30 வயதான அஸ்வின் 49 டெஸ்ட் போட்டியில் விளையாடி 275 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





## பிக்பாஸிடம் கோரிக்கை விடுத்த ஓவியா

‘பிக்பாஸ்’ நிகழ்ச்சியில் ஜூலி சொன்ன பொய்தான் தன்னை அதிகம் பாதித்ததாக ஓவியா தெரிவித்துள்ளார்.

“ஒருமுறை பொய் சொன்னால் ஓகே, ஆனால் தொடர்ந்து பொய் சொல்லிக் கொண்டிருப்பது சரியில்லை” என பிக்பாஸ் கன்பெஸன் ரூமில் பேசிக்கொண்டிருக்கும் போது ஓவியா கூறினார்.

இதற்கு முன்னர் ஒருநாள் காலை எல்லோரும் எழும் போது ‘பிக் பாஸ்’ வீட்டில் ஒலித்த ஒரு பாட்டைக் கேட்டு கண் கலங்கியது பற்றிப் பேசிய ஓவியா,

“அந்தப் பாட்டை கேட்டதும் ‘எமோஷனல்’ ஆகிவிட்டேன், அந்த மாதிரியான சோகமான பாட்டை இனி போடாதீங்க ப்ளீஸ். நான் அந்த அளவுக்கு ஸ்ட்ரோங்கான பொண்ணு இல்லை. நான் அழுவதை மற்றவர்கள் பார்க்க விரும்பவில்லை...” எனக் கூறிய அவரது கண்களில் வந்த கண்ணீரை கமெராவுக்கு காட்டாமல் திரும்பிக் கொண்டார். (ஒ)




செட்டிக்குளத்தில் வீடொன்று

# தீயில் எரிந்து நாசம்

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வீடு ஒன்று எரிந்து நாசமாகியுள்ளதாக செட்டிக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். செட்டிக்குளம், அழகாபுரி கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் வசித்த குடும்பத்தினர் தமது பிள்ளையான சிறுவன் ஒருவனை வீட்டில் நிறுத்திவிட்டு வெளியில் சென்ற சமயமே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ பரவியதையடுத்து சிறுவன் கூச்சலிட்டதுடன் அப்பகுதியில் இருந்த இளைஞர்கள் தீயை அணைக்க முயன்றதுடன் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர். பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து தீயை கட்டுக்குள் கொண்டு வர முயற்சித்த போதும் வீடு முழுமையாக எரிந்து நாசமாகிய நிலையிலேயே தீ பரம்பல் கட்டுப்படுத்தப்பட்து. வீட்டில் இருந்த சகல பொருட்களும் முழுமையாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. இத் தீ விபத்துக்கு மின்னொழுக்கே காரணம் என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (உ)

# இன்றைய கருத்தோவியம்






# குற்றம்புரிய அனுமதியோம்

குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு தண்டனை வழங்குவதால் படையினர் எவ்வாறு பாதிக்கப்படுவர் என்று காணி மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் கயந்த கருணாதிலக கேள்வி எழுப்பியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கொத்தாவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

சீருடையில் மறைந்திருந்து குற்றங்களை புரிவதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது என்று தெரிவித்த அமைச்சர் இதனை சிலர் படையினரை பலிக்கடாவாக்கும் செயல் என்று விமர்சிக்கின்றனர். இது முற்றிலும் அரசியல் இலாபம் தேடும் பிரசாரம் என்றும் தெரிவித்தார்.

இராணுவத்தினர் குறித்து கருத்துத் தெரிவிப்பவர்கள் இராணுவத்துக்காக பெரும் சேவை ஆற்றிய மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவுக்கு உரிய பாதுகாப்பை வழங்கவில்லை. பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை மீட்டெடுக்க தியாகத்துடன் பணிபுரிந்த சரத் பொன்சேகா அரசியலுக்கு பிரவேசித்தபோது அவருக்கு மரியாதை அளித்த விதத்தை மறந்துவிட முடியாது என்றும் காணி மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் கயந்த கருணாதிலக மேலும் தெரிவித்தார். (எ)

# திருமலைத் துறைமுக அபிவிருத்திக்கு 10 ஆயிரம் ஏக்கர் காணி தேவையாம்



இலங்கைப் பொருளாதாரத்துக்கு பாரியளவில் பங்களிப்பு செய்யும் திருகோணமலை துறைமுகம் துரிதமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்காக மூன்று வருட அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துறைமுகம் மற்றும் கடல் நடவடிக்கைகள் தொடர்பான அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலை துறைமுகத்துக்கு உட்பட்ட சுமார் 10ஆயிரம் ஏக்கர் காணியை அடையாளம் கண்டு வர்த்தமானியை வெளியிடுவதற்கும் இந்த காணியை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. துறைமுகத்தில் 4 பகுதிகளை மிகவும் சிறப்பான முறையில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக அபிவிருத்தி செய்து நாட்டின் பொருளாதாரத்துக்கு நன்மையளிக்ககூடிய வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.(உ)

# பொலிஸாரின் இறுதிக்கிரியைக்கு 25 ஆயிரம் ரூபா நிதியுதவி



துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த உபபொலிஸ் பரிசோதகர் ஹேமச்சந்திரவின் இறுதிக்கிரியைக்காக நெல்லியடி வணிகர் கழகத்தினரால் 25 ஆயிரம் ரூபா நிதி கையளிக்கப்பட்டுள்ளது.

நெல்லியடிப்பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி பியந்தவிடம் இன்று நிதி கையளிக்கப்பட்டதாக நெல்லியடி வர்த்தக சங்கத்தின் செயலாளர் சுரேரஞ்சன் தெரிவித்தார்.

மேல்நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் உயிரை காப்பாற்ற தன் உயிரை ஈர்ந்த கடமைவீரன் ஹேமச்சந்திரன் தமிழ் மக்களின் மனங்களில் மதிப்புக்குரியவராகியுள்ளார்.

அவரின் குடும்பத்தினரின் துயரத்தில் பங்கெடுக்கும் வகையில் நெல்லியடி வணிகர் கழகம் இந்த முன்மாதிரியான நடவடிக்கையினை முன்னெடுத்தது என வணிகர் கழகத்தின் உபதலைவரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் வட மாகாணசபை உறுப்பினருமான அகிலதாஸ் சிவக்கொழுந்து தெரிவித்தார். (உ)

பொருளாதார மத்திய நிலையம்

# அடிக்கல் நாட்டு விழா



களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களுதாவளை கிராமத்தில் பொருளாதார மத்திய நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு முன்னாள் பிரதியமைச்சர் சோ.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முந்நூறு மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பீ.ஹரிசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்வில் விஷேட அதிதிகளாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அகமட், மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும்அரச உயர்அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (உ)



# பிரித்தானிய உயர்ஸ்தானிகருடன் பாதுகாப்பு செயலர் சந்திப்பு

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ்டோரிஸ் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்ன ஆகியோருக்கிடையிலான சந்திப்பு இடம்பெற்றது. பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற இச்சந்திப்பின் போது அவர்களிடையே இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பான சிநேகபூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது உதவி பிரித்தானிய உயர்ஸ்தானிகரும் கலந்து கொண்டார். (உ)

## நாளை நாளும் கோளும்

26.07.2017 புதன்கிழமை ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 10ஆம் நாள்


திருதியை பி.ப. 11.51 வரை | மகம் மு.ப. 08.48 வரை | மரணயோகம் | கரிநாள் | ஆடிப்பூரம் | நாகசதுர்த்தி விரதம்

இராகுகாலம் 12.02-01.32 | சுபநேரம் 04.32-06.02 | எமகண்டம் 07.32-09.02

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மறதி | ஒய்வு | பாராட்டு | சோதனை | சாந்தம் | குழப்பம் | ஊக்கம் | ஜெயம் | நலம் | பொறுமை | வரவு | நன்மை |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!



1993.07.25

'இதயபூமி-1' என்னும் நடவடிக்கை மூலம் மணலாறில் அமைந்திருந்த மண்கிண்டிமலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் தாக்கியழிக்கப்பட்டது.

### இடைத் தரகர்...(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் அடிப்பதாக வெளியாகிருந்த காணொளி குறித்தும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிபதி ஏ.எம்.எம்.றியால் உத்தரவிட்டுள்ளார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை ஊர்காவற்துறை நீதிமன்றில் இன்று நடைபெற்றது. இதன்போது, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்க சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் காணொளி ஒன்றை காண்பித்தனர். அந்தக் காணொளியில் சுவிஸ்குமாரை மக்கள் கட்டி வைத்திருந்த போது அந்த இடத்தில், இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் சென்று பார்வையிடும் காட்சிகள் அடங்கியிருந்தன. நீதிபதி மேற்படி காணொளி தொடர்பில் விசாரணை நடத்தி அடுத்த வழக்குத் தவணையின் போது அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டார். (எ-01)

### வடக்கு...(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது என்றும் பாதுகாப்புத் துறைசார்ந்தோர் பற்றி வெளிநாடுகளில் தவறான கருத்துக்கள் நிலவுமாயின், அவற்றை சரி செய்வது அவசியம் என்றும் பாதுகாப்பு முக்கியஸ்தர்கள் இதன் போது தெரிவித்தார்கள். இந்தச் சந்திப்பில் முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், ஆணைக்குழுவின் மேலதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கை பாதுகாப்புத் துறைசார் நிபுணத்துவ அறிவை வெளிநாடுகளுடன் பகிர்ந்து கொள்வது பற்றி கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (உ)

### முன்னாள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றில் இன்று இடம்பெற்றது. இதன்போது, பலவந்தமாக ஆள் சேர்ப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கண்ணதாசனுக்கு ஆயுள் தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. (எ)

### சவாலுக்காக... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசத்தில் கடந்த 22ஆம் திகதி பொலிஸ் சார்ஜண்ட் ஒருவரைத் துப்பாக்கியினால் சுட்டுக்கொலை செய்து, மேலும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளை துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டு காயப்படுத்திய சம்பவத்தின் முக்கிய சந்தேக நபரை கைது செய்யும் நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுவந்தோம். இந்த நிலையில்இன்று காலை யாழ்பொலிஸ்நிலையத்தில் அவர் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார். - என்றுள்ளது. (எ)


# கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தை கண்டித்து இன்று கிளிநொச்சியில் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினர் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டம் கிளிநொச்சி டிப்போச் சந்தி பசுமைபூங்காவில் இன்று காலை 10 மணியளவில் நடத்தப்பட்டது. குற்றவாளிகளை உடனே தண்டிக்கவும், நீதிபதிக்கே இந்த நிலை என்றால் சாதாரண மக்களின் நிலை என்ன? இலங்கையில் நீதி மறுக்கப்படுகின்றதா? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் ஏந்தியிருந்தனர். (உ)




# தென் மாகாண சபையில் அமளி



கூட்டு எதிரணியின் உறுப்பினர்கள் குழுவொன்று இன்று தென் மாகாண சபைக்கு கறுப்பு பட்டி அணிந்துள்ள நிலையில், தென் மாகாண சபையினுள் பதற்ற நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

வட மத்திய மாகாண சபையின் அதிகார மாற்றத்தில் எதிர்ப்பு வெளியிடும் நோக்கில் தென் மாகாண சபை உறுப்பினர்கள் கறுப்பு பட்டி அணிந்து வந்துள்ளனர்.

இதேவேளை, முன்னணி உறுப்பினர் சன்ன சாலிய உண்டியலுடன் சபைக்கு வந்தமையால் மேலும் குழப்ப நிலை அதிகரித்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள், சபை நடுவில் வந்து உண்டியலை பறிக்க முயற்சித்துள்ளனர்.

இதன்காரணமாக அவரைச் சபையில் இருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையால் அங்கு அமளி துமளி நிலை ஏற்பட்டது. (உ)

# நீதிபதியின் செயலால் நெகிழ்ந்த அமெ. தூதர்

தனது மெய்ப்பாதுகாவலரின் மனைவியின் காலில் நீதிபதி மா.இளஞ்செழியன் வீழ்ந்து அழுத சம்பவத்தை கண்டு "ஆழமாக நெகிழ்ந்தேன்" என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் விடுத்துள்ள பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ். நல்லூர் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் உயிரிழந்தார்.

மெய்ப்பாதுகாவலரின் மனைவியின் காலில் வீழ்ந்து நீதிபதி மா. இளஞ்செழியன் அழுதார். இது குறித்த காணொளியை தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப், இந்த சம்பவத்தைக் கண்டு"ஆழமாக நெகிழ்ந்தேன்" எனவும் பதிவிட்டுள்ளார். (உ)

### லலித் ஜயசிங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்காவற்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளார். சந்தேகநபர் தப்பி செல்வதற்கு உதவி செய்த குற்றச்சாட்டில் லலித் ஜயசிங்க கடந்த 15 ஆம் திகதி குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். (எ)

## வட இந்திய காசி சீரடி யாத்திரை

ஆரம்பம் : 28.08.2017

| யாத்திரீகர் - 20 | நாட்கள் - 15 |
| --- | --- |

**செல்லுமிடங்கள்:**

டெல்லி, ஆக்ரா, தாஜ்மகால், அலகாபாத் (கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி, சங்கமம், கயா, காலமானவர்களுக்கு சிரார்த்தம் செய்யும் இடம். புத்தகயா, புத்தாலயங்கள், சீத்தமடி, காசி (வாரணாசி), 3 நாள்கள் குருசேத்திரம், பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம், மும்பாய், சீரடி பாபா, சனி, சிங்கனாப்பூர், அக்கல் கோட், பாபா, இராமேஸ்வரம், மதுரை, துல்க்காப்பூர், அம்மன் கோயில், வேறு இடங்களும் காணலாம். ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.

உங்களிடம் வாங்கும் ரூபாவுக்கு எமது சேவை. 4 விமானப் பயணங்கள், A/C வாகன வசதி, மூன்று வேளை மடப்பள்ளி ஆட்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, பலகுக் கட்டணங்கள் எயாபோட் போக வர வாகன வசதி, 2 பேருக்கு குளியலறை (வெஸ்ரன் கொமட்) இணைந்த அறைகள் (NON AC), குடிநீர், மேலும் ஆலயங்களில் எடுக்கும் புகைப்படங்கள் 25 அன்பளிப்பாகத் தரப்படும்.

விருப்பமுடையவர்கள் பாஸ்போர்ட் போட்டோக் கொப்பியும் ஒரு பாஸ்போட் சைஸ் புகைப்படமும் அனுப்பி பதிவு செய்யவும். மேலும் விபரங்களைக் கேட்டு அறிந்து பதிவுசெய்யவும்.

**குறிப்பு :- அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழா முடிந்த பின்னர் புறப்படவுள்ளோம்.**

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
மகன் ராஜன்
No. 59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு-11
Tel: 077 768 0102 / 077 736 2154
Facebook : sriranganathanthuraiappa

## அரசியல் விஞ்ஞான கருத்தரங்கு

2017
G.C.E. A/L
மாணவர்களுக்கான

அரசியல் விஞ்ஞான பாடத்துக்கான வழிகாட்டல் கருத்தரங்கு 24ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் மாலை 2.30 - 5.30 மணி வரை நடைபெறும்.

- ✶ எதிர்பார்க்கை விடயங்கள்ஆராயப்படும்.
- ✶ கையேடுகள் வழங்கப்படும்.
- ✶ அனைவரும் பங்குபற்றலாம்.

ஆசிரியர்: K.S.இளங்கோ

DMI
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
T.P.: 078 460 7816

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 25.07.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.